S.C.No. 198/2025 நாள் 17.07.2026 PW 23 – திரு. ராஜு

(Crl.M.P.No. 9/2026 நாள் 04.06.2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

கொலை வழக்கு சம்மந்தமாக முதல் முதலாக காவல்நிலையத்திற்கு கிடைக்கும் தகவல் மிகவும் முக்கியமான சாட்சியம் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். கொலை வழக்கு சம்மந்தமாக முதல் முதலாக காவல்நிலையத்திற்கு கிடைக்கும் தகவலை நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்பது தெரியும் என்றால் பொது நாட்குறிப்பில் பதிவு செய்யவேண்டும். கொலை வழக்கு சம்மந்தமாக முதல் முதலாக காவல்நிலையத்திற்கு கிடைக்கும் தகவலை நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும். அ.சா.21 முத்தையாபுரம் உதவி ஆய்வாளர் இந்த சம்பவம் பற்றி தகவல் கிடைத்து அந்த தகவலை 10.06.2015 அன்று இரவு 8.00 மணிக்கு என்னிடம் தெரிவித்துவிட்டார் என்றால் சரிதான். அ.சா.21 கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். அ.சா.21 கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் புலன்விசாரணையை ஆரம்பித்தேன் என்றால் சம்பவ இடம் சென்று முதல்தகவல் அறிக்கையை பெற்று பின்னர் புலன்விசாரணை ஆரம்பித்தேன். என்னுடைய புலன்விசாரணையின்படி சம்பவ இடத்திலிருந்து இரவு 8.15 மணிக்கே இறந்தவரின் உடல் அரசுமருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றுசொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு போகும்போது சம்பவ இடத்தில் இறந்தவரின் உடல் இல்லை என்றால் சரிதான். இறந்தவரின் உடலை ஆம்புலன்சில் ஏற்றுவதை நான் பார்க்கவும் இல்லை என்றால் சரிதான்.

பிரேதத்தை ஆம்புலன்சில் ஏற்றும்போது நான் சம்பவ இடத்திற்கு வந்து சேரவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ– 21 முதல் தகவல் அறிக்கையின்படி 10.06.2015 அன்று இரவு 8.30 மணிக்கு அ.சா.1 மாரிமுத்து, அ.சா.2 பாஸ்கர் ஆகியோர்கள் முத்தையாபுரம் காவல்நிலையம் வந்து புகார் கொடுக்க வந்துள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா.1 புகார்கொடுக்க வரும் முன்பே இறந்தவரின் உடல் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அ.சா.21 கற்பகவள்ளியிடம் சம்பவம் பற்றி தகவல் கொடுத்தது யார் என்று விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. அ.சா.1 க்கு கொலை சம்மந்தமாக என்ன தகவல் கிடைத்தது என்பது பற்றியும் நான் விசாரிக்கவில்லை என்றால் இந்த வழக்கு சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததாக சொன்னார். என்ன தகவல் கிடைத்தது என்ற விவரத்தை அவர் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. அ.சா.21 டம் கொலை சம்மந்தமாக யார் தகவல் கொடுத்தார்கள் என்பதும், கொலை சம்பவம் நடந்தது பற்றியும் விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றும், அந்த விவரங்கள் இந்த வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் தற்சமயம் அதை மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 10.06.2015 தேதிய முத்தையாபுரம் காவல்நிலைய பொது நாட்குறிப்பை பரிசீலினை செய்து பார்த்தேனா என்றால் நினைவில்லை. வழக்கு நாட்குறிப்பில் எந்த இடத்திலும் பொது நாட்குறிப்பை பரிசீலனை செய்து பார்த்தேன் எந்த விவரமும் துலங்கவில்லை என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பை நான் பரிசீலனை செய்து பார்த்தேன் என்றும், அதில் இந்த வழக்கு சம்மந்தமாக முதல் முதலாக கிடைத்த தகவலை அ.சா.21 பதிவு செய்திருந்தார் என்றும், அந்த விவரங்கள் இந்த வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் அதை

மறைத்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது புலன்விசாரணையின்படி இந்த வழக்கின் முதல் சம்பவம் நர்மதா மொபைல்ஸ் அருகே நடந்துள்ளது என்றால் சரிதான். 2 வது சம்பவ இடம் சுதா சலூான் எதிரே நடந்துள்ளது என்றால் சரிதான். முதல் சம்பவ இடத்திற்கும், 2 வது சம்பவ இடத்திற்கும் இடையே உள்ள துாரம் சுமார் 200 அடி துாரம் இருக்கும் என்றால் சரிதான். நான் சாட்சி சொல்லும் சாட்சி கூண்டிற்கும், Sessions Clerk இருக்கும் இடத்திற்கும் சுமார் எத்தனை அடி இருக்கும் என்றால் சுமார் 6, 7 அடி இருக்கும். நான் சம்பவ இடத்தை தெளிவாக பார்த்துதான் பார்வைமகசர், வரைபடம் தயார்செய்தேன் என்றால் சரிதான். முதல் சம்பவம் நடந்ததாக சொல்லும் நர்மதா மொபைல்ஸ் கடை முன்பு இரத்தமோ, இரத்தக்கறையோ இல்லை என்றால் சரிதான். முதல்சம்பவ இடத்திற்கும், இரண்டாவது சம்பவ இடத்திற்கும் இடையே உள்ள பாதையில் இரத்தக்கறை எதுவும் இல்லை என்றால் சரிதான். இரத்தக்கறை எதுவும் இல்லாததால் பார்வைமகசர், வரைபடத்தில் அது பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அத்திமரப்பட்டி விலக்கில் வைத்து சம்பவம் நடந்ததாக வரைபடத்திலும், பார்வைமகசரிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய புலன்விசாரணை பிரகாரம் அத்திமரப்படி விலக்கில் வைத்து சம்பவம் நடைபெறாததால் வரைபடத்திலும், பார்வைமகசரிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இறந்துபோனவர் கடைசியாக எப்போது சாப்பிட்டார் என்று சாட்சிகளிடம் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. இறந்துபோனவர் கடைசியாக எப்போது சாப்பிட்டார் என்று சாட்சிகளிடம் விசாரணை செய்தேன் என்றாலும், அந்த விவரங்கள் இந்த வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் அதை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கிடந்த செல்போனின் சிம்கார்டு நம்பரை விசாரித்தேனா என்றால் இல்லை.

சிம்கார்டு யார் பெயரில் உள்ளது என்பது பற்றியும் நான் விசாரிக்கவில்லை என்றால் சிம்கார்டு முக்காணியை சேர்ந்த மாட்டுடையான் என்ற பெயரில் இருந்ததாக விசாரணையில் தெரியவந்தது. மாட்டுடையானை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்தேனா என்றால் இல்லை. மாட்டுடையானை சாட்சியாக விசாரணை செய்தேன் என்றாலும், அவருடைய வாக்குமூலங்கள் இந்த வழக்கிற்கு முற்றிலும் விரோதமாக இருந்ததால் மறைத்துவிட்டேன் என்றுசொன்னால் சரியல்ல. மாட்டுடையான்தான் மாடசாமி என்பவரை கொலை செய்ததில் முக்கிய பங்கு வகித்தவர் என்று சொன்னால் சரியல்ல. பிரேதத்தை பிரேத வைப்பறையில் வைப்பதற்கு அ.சா.19 மருத்துவர் அகிலனிடம் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தை பரிசீலனை செய்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். அது ஒரு முக்கியமான ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினேனா என்றால் மேற்படி வேண்டுகோள் கடிதத்தின் நகல் வழக்கு கோப்பில் உள்ளது. அ.சா.ஆ–1 புகாரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட நேரம் பற்றி அ.சா.22 உதவி ஆய்வாளரிடம் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. அ.சா.ஆ 1 புகார் வாக்குமூலத்தில் அ.சா.1, அ.சா.2, அ.சா.3, இறந்துபோன மாடசாமி ஆகியோர்கள் முக்காணி ஊருக்கு செல்வதற்காக சம்பவம் இடம் சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 மாரிமுத்து,அ.சா.2 பாஸ்கர் ஆகியோர்கள் என்னுடைய விசாரணையில் அ.சா.1 மாரிமுத்து, அ.சா.2 பாஸ்கர், அ.சா.3 வேலாயுதம், இறந்துபோன மாடசாமி ஆகியோர்கள் முக்காணி ஊருக்கு செல்வதற்காக சம்பவம் இடம் சென்றதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா.1 என்னுடைய விசாரணையில் சுமார் 7.00 மணியளவில் நானும், எனது பெரியப்பா, எனது அப்பா, என் தம்பி பாஸ்கர் ஆகியோர்கள் என் பெரியப்பாவை ஊருக்கு

அனுப்புவதற்காக அத்திமரப்பட்டி விலக்கு வந்தோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 பாஸ்கர் என்னுடைய விசாரணையில் நாங்கள் நான்குபேரும் பஸ் ஏற்றிவிடுவதற்காக அத்திமரப்பட்டி விலக்கிற்கு வந்தோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 வேலாயுதம் பின்னர் நான் ஊருக்கு செல்வதற்காக என்னை பஸ் ஏற்றி விடுவதற்காக எனது தம்பி, எனது தம்பி மகன்கள் அ.சா.1 மாரிமுத்து, அ.சா.2 பாஸ்கர் ஆகியோர்கள் அத்திமரப்பட்டி விலக்கிற்கு வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 வேலாயுதத்தை முக்காணிக்கு பஸ் ஏற்றி விடுவதற்காக சம்பவ இடத்திற்கு அ.சா.1, அ.சா.2, இறந்துபோன மாடசாமி ஆகியோர்கள் வந்ததாக எனது புலன்விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். அ.சா.17 காவலர் 10.06.2015 அன்று இரவு 10.15 மணிக்கு துரித தபால் அறிக்கையை பெற்று 11.06.2015 ஆம் தேதி அதிகாலை 2.20 மணிக்கு நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்ததாக என்னுடைய விசாரணையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 4 மணிநேரம் கழித்து காலதாமதமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்தற்கு எந்தவிதமான காரணத்தையும் அ.சா.17 என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.17 என்னுடைய விசாரணையில் பேருந்து இல்லாததால் பேருந்திற்கு காத்திருந்து அதனால் காலதாமதம் ஆனது என்றும், இரவு 1.30 மணிக்குத்தான் பேருந்து வந்தது, அதன்பிறகு நீதிபதி வீட்டிற்கு சென்று கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக முதல்முதலாக கொடுத்த புகாரை மறைத்துவிட்டு, 11.06.2015 அன்று அதிகாலை அ.சா.ஆ 1 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால்தான் அ.சா.ஆ–1 நீதிமன்றம் சென்றடைய காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சா.பொ.13 முதல் 16 சாரம்

மற்றும் சட்டை இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் சிந்தி கிடந்த இரத்தத்தில் சா.பொ.13 முதல் 16 வரை உள்ள சாரம் சட்டைகளில் தடவி நான் இரத்தக்கறை ஏற்படுத்தினேன் என்றுசொன்னால் சரியல்ல. சா.பொ.8,9,10 அரிவாள்கள் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து இறந்தவரின் உடல் எந்த ஆம்புலன்சில் எடுத்து செல்லப்பட்டது என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன், தற்போது ஞாபகமில்லை. அது சம்மந்தமாக வழக்கு நாட்குறிப்பில் எதுவும் துலங்காது என்றால் சரிதான். இறந்தவரின் உடல் ஆம்பலன்சில் ஏற்றி சென்ற ஆம்புலன்சின் ஓட்டுநரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் உயிர்காக்கும் பணியில் இருப்பதால் அவர்களை விசாரிக்க வேண்டிய அவசியமில்லை என வழிகாட்டுதல்கள் உள்ளது. இறந்தவருடைய உடலை ஏற்றி செல்லப்பட்ட ஆம்புலன்ஸ் தனியார் ஆம்புலன்ஸா அல்லது அரசு ஆம்புலன்ஸா என்று எனது புலன்விசாரணையில் துலங்கவில்லை என்றால் சரிதான். இறந்தவரின் உடல் போலீசாரால் அரசுமருத்துவமனைக்கு ஆம்புலன்சில் ஏற்றி கொண்டு செல்லப்படவில்லை என்றுசொன்னால் சரியல்ல. கொலை வழக்குகளில் விசாரணை செய்த சாட்சிகளின் வாக்குமூலங்கள் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் 21.01.2016 அன்றுதான் நீதிமன்றம் அனுப்பப்பட்டுள்ளது என்றுசொன்னால் சரிதான். சம்பவம் நடந்த அன்ற இரவு அத்திமரப்பட்டியை சேர்ந்த பட்டாணிகோனார், பட்டாணிகோனார் மகன் ஆகியோரை சந்தேகப்பட்டு பிடித்து வைத்து விசாரித்தேன்

என்றுசொன்னால் சரியல்ல. முக்காணியை சேர்ந்த சின்னதம்பி, இசக்கி ஆகியோரையும் இந்த வழக்கில் சந்தேகப்பட்டு தேடினேன் என்றும், அவர்கள் இருவரும் தலைமறைவு என்று பத்திரிக்கையிலும் செய்தி வந்தது என்றும் சொன்னால் சரியல்ல. 11.06.2015 அன்று அதிகாலைதான் இந்த 3 எதிரிகளையும் பொய்யாக இந்த வழக்கில் சேர்த்தேன் என்றுசொன்னால் சரியல்ல. சா.பொ. 7 செருப்புகள் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றுசொன்னால் சரியல்ல. அ.சா.1 மாரிமுத்து, அ.சா.2 என்னுடைய விசாரணையில் 10.06.2015 அன்று நான் அத்திமரப்பட்டியில் இருக்கும்போது என் பெரியப்பா வயக்காட்டை பார்க்க எங்கள் ஊருக்கு வந்திருந்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இரவு 9.15 மணியளவில் அ.சா.ஆ.21 முதல்தகவல் அறிக்கை என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சம்பவ இடம் சென்று பார்வைமகசர், மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்றுசொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து இரத்தக்கறை படிந்த மொத்தம் 3 ஜோடி செருப்புகள் கைப்பற்றப்பட்டதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. 12.06.2015 அன்று 6.30 மணியளவில் 3 எதிரிகளையும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2ம்எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் தரவில்லை என்றாலும், எதிரிகள் சான்று பொருட்கள் எதையும் எடுத்து என்னிடம் ஆஜர்ப்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ–25, 26, 27, 28 ஆகியவைகள் காவல்நிலையத்தில் வைத்து என்னால் பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றுசொன்னால் சரியல்ல. 1,3 எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் 1,3 எதிரிகளிடம் கையெழுத்தும் வாங்கவில்லை என்றால்

சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள சான்றுபொருட்கள், சான்றாவணங்கள் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவைகள் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்யவில்லை என்றுசொன்னால் சரியல்ல. சாட்சிகள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றாலும், கற்பனையாக வாக்குமூலங்கள் தயார் செய்து நீதிமன்றம் அனுப்பியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1வது எதிரி சம்பவத்திற்கு முன்பேயிருந்தும் சம்பவ நாளிலும் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது பற்றி என்னுடைய விசாரணையில் துலங்கியது என்றும், அந்த விவரங்களை நான் மறைத்து விட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றுசொன்னால் சரியல்ல. என்னுடைய புலன்விசாரணை ஒருதலைபட்சமானது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>